**இணைப்பு – 5**

**பிள்ளைகளது அளவீடுகளை சரியாக பதிவுசெய்தல்**

**படிநிலை 1-- பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு ‘B’ பகுதியில் வாசிப்பை பதிவு செய்தல்**

சரியாக அளவீடுகளை எடுக்கவும். உரிய நிரலில் நிறையை கிட்டிய கிராமில் பதியவும். அதேபோல் நீளம் / உயரம் கிட்டிய மி.மீ. இல் அளக்கப்பட்டு உரிய நிரலில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

**படிநிலை 2- பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு ‘A’ பகுதியில் வாசிப்புகளைக் குறித்தல்**

பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு ‘A’ பகுதியில்

- சரியான வரைபை பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு ‘A’ பகுதியில் தேர்ந்தெடுத்து, நிறை மற்றும் நீளம் / உயரம் ஆகிய அளவுகளை மிகச் சரியாக குறிக்க.
- பிள்ளை அளவீடு எடுப்பதற்கு கிரமமாக வந்திருந்தால் கடைசியான இரண்டு புள்ளிகளையும் நேர்கோட்டினால் இணைக்க (இந்தத் தடவை அளவீடும் சென்ற தடவை அளவீடும்)
- பிள்ளை அளவீடு எடுப்பதற்கு கிரமமாக வராதிருந்தால் (இறுதியாக வந்த தினத்திலிருந்து சிபார்சு செய்யப்படும் இடைக்காலத்தை விட மிகவும் பிந்தியதாக) கடைசி இரண்டு புள்ளிகளையும் புள்ளிக்போட்டினால் இணைக்க

**படிநிலை 3- புள்ளிக் குறியீட்டையும் வளர்ச்சி வரைபையும் விளங்கி அதற்கேற்ற குறியீட்டை பதிவு செய்தல்.**

பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு ‘A’ பகுதியில் காணப்படும் நிற வலயங்கள் மற்றும் நியம வளர்ச்சி வரைபுகள் என்பவற்றோடு தொடர்புறுத்தி பிள்ளையின் வளர்ச்சிப் படிநிலையை மிகச் சரியாக விளங்கிக்கொள்ளப்பட வேண்டும். அதன்பின் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டதற்கேற்ப உரிய குறியீடு பதியப்படவேண்டும். அளவீடுகளை எடுக்கும் ஒவ்வொரு தடவையும் பொ.சு.ம. இந்தக் குறியீட்டை நிறை எடுக்கும் ஒவ்வொரு தடவையும் பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு ‘B’ பகுதியில் குறிப்பதோடு இவ் அளவீடு சிகிச்சை நிலையத்தில் எடுக்கப்படுமாயின் பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு ‘B’ பகுதிக்கு மேலதிகமாக ‘A’ பகுதியின் தரிசிப்புக் குறிப்பு பகுதியிலும் குறித்தல் வேண்டும்.

**வயதுக்கேற்ற நிறை வரைபுயை விளங்கிக்கொள்ளல்**

| **வளர்ச்சி வரைபுயின் திசை** | **வளர்ச்சியின் நிலை** | **குறியீடு** |
|---|---|---|
| பச்சை / இளம்பச்சை வலயத்திலுள்ள நியம வளர்ச்சி வரைபுகளுக்கு சமாந்தரமான வளர்ச்சி* | சாதாரண வளர்ச்சி | N |
| பச்சை / இளம்பச்சை வலயத்தில் இரண்டு அடுத்தடுத்த நிறைகள்<br>- பெற்ற நிறை போதுமானதாயில்லை. (பிறப்பு நிறையுடன் ஒப்பிடும்போது)<br>- நிறை அதிகரிப்பில் தோல்வி (நிறை அதிகரிக்கவேயில்லை. அல்லது கிடையச்சுக்கு சமாந்தரமான வரைபு)<br>- நிறை குறைவடைதல் | வளர்ச்சி வீழ்ச்சியடைவு (சாதாரண வலயத்தினுள்) | NO |
| செம்மஞ்சள் வலயத்தில் உள்ள நியம வளர்ச்சி வரைபுக்கு சமாந்தரமான வளர்ச்சி | சாதாரண நிறைக் குறைபாடு | X |
| செம்மஞ்சள் வலயத்தில் இரண்டு அடுத்தடுத்த நிறைகளில்<br>- பெற்ற நிறை போதுமானதாயில்லை.(பிறப்பு நிறையுடன் ஒப்பிடும்போது)<br>- நிறை அதிகரிப்பில் தோல்வி (நிறை அதிகரிக்கவேயில்லை. அல்லது கிடையச்சுக்கு சமாந்தரமான வரைபு)<br>- நிறை குறைவடைதல் | வளர்ச்சி வீழ்ச்சியடைவு (சாதாரண நிறைக்குறைவு வலயத்தினுள்) | XO |
| சிவப்பு வலயத்தில் உள்ள நியம வளர்ச்சி வரைபுக்கு சமாந்தரமான வளர்ச்சி | கடுமையான நிறைகுறைவு | XX |
| சிவப்பு வலயத்தில் இரண்டு அடுத்தடுத்த நிறைகள்<br>- பெற்ற நிறை போதுமானதாயில்லை. (பிறப்பு நிறையுடன் ஒப்பிடும்போது)<br>- நிறை அதிகரிப்பில் தோல்வி (நிறை அதிகரிக்கவேயில்லை. அல்லது கிடையச்சுக்கு சமாந்தரமான வரைபு)<br>நிறை குறைவடைதல் | வளர்ச்சி வீழ்ச்சியடைவு** (கடும் நிறைகுறைவு வலயத்தினுள்) | XXO |
| ஊதா வலயம் | “அதிக எடை” | OW |
| வளர்ச்சி வரைபு பச்சை வலயத்தலுள்ளது. ஆனால் சிறுகாலகட்டத்தில் செங்குத்தாக உயர்ந்து நியம வளர்ச்சி வரைபுகளை ஊடறுத்துச் செல்கிறது ***ழ*** | “அதிக எடை” | OW |

* இளம்பச்சை வலயம்- இளம்பச்சை வலயத்தில் உள்ள பிள்ளையொன்றுக்கு நிறைக்குறைவு ஏற்பட்டால் செம்மஞ்சள் வலயத்திற்குள் வருவதற்கான ஆபத்து அதிகம். ஆகவே இந்தப் பிள்ளைகளின் நிறைகளை அவர்களுக்கென விதந்துரைக்கப்படும் வலயத்தில் பேணுதல் மிக அவசியம்.

** “நிறைக்குறைவுப் பிள்ளை”யொன்று, அந்தப் பிள்ளையின் வளர்ச்சி வரைபானது வளர்ச்சி வீழ்ச்சி ஏற்படுவதற்கு முன்னர் இருந்த ஆரம்ப வளர்ச்சிக்குரிய படிநிலையை அடையும்வரை ‘நிறை குறைவை உடைய பிள்ளை” எனக் கருதப்படல் வேண்டும் ( அவ்வாறே பதியப்படவும் வேண்டும்)

*** ஒரு காலகட்டத்திலிருந்த வளர்ச்சி வீழ்ச்சியை விரைவாகத் தாண்டி உரிய வளர்ச்சியை அடைய முயலும் பிள்ளையை “அதிக எடை”யுடையதாக கருதக்கூடாது.

**˙வயதுக்குரிய நீளம் / உயர வரைபை விளங்கிக்கொள்ளல்**

| **வுளர்ச்சி வரைபின் திசை** | **வளர்ச்சிப் படிநிலை** | **குறியீடு** |
|---|---|---|
| பச்சை / இளம்பச்சை வலயத்தில்* உள்ள நியம வளர்ச்சி வரைபுகளுக்கு சமாந்தரமான வளர்ச்சி | சாதாரண வளர்ச்சி | NH |
| வளர்ச்சி வரைபு செம்மஞ:சள் வலயத்தில் உள்ளது | மத்தியதர வளர்ச்சித்தடை | S |
| வளர்ச்சி வரைபு சிவப்பு வலயத்தில் உள்ளது | கடுமையான வளர்ச்சித்தடை | SS |

*இளம்பச்சை வலயம்- இளம்பச்சை வலயத்தில் உள்ள பிள்ளையொன்றுக்கு வயதுக்கேற்ற நீளம் / உயர வரைபில் நிறைவீழ்ச்சி ஏற்படுமாயின் செம்மஞ்சள் வலயத்துள் விழக்கூடிய ஆபத்துநிலை அதிகம். ஆகவே இந்தப் பிள்ளைகளின் நிறைகளை அவர்களுக்கென விதந்துரைக்கப்படும் வலயத்தில் பேணுதல் மிக அவசியம்

பிள்ளை அளவீடு எடுப்பதற்கு ஒரு குறித்த மாதத்தில் வராதிருந்தால் (விதந்துரைக்கப்பட்ட இடைக்காலத்தின் பின்) அது குறித்தபிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு 'B' பகுதியில் வரவின்மை எனும ˙பொருளில் 'A' எனக் குறிக்கப்பட வேண்டும்

**குறைமாதக் குழந்தைகளின் வளர்ச்சி வரைபை விளங்கிக்கொள்ளல்**

எல்லா குறைமாதக் குழந்தைகளையும் (நிறையையும் நீளத்தையும் அளந்த பின்னர்) அவைகளது வளர்ச்சி நிலையை சரியாக வளங்கிக் கொள்வதற்காக சுகாதார வைத்திய உத்தியோகத்தரிடம் அனுப்புதல் அவசியம்

வைத்திய உத்தியோகத்தர் குறித்த குழந்தையின் நியம வளர்ச்சி வரைபோடு தொடர்பாக அதன் வளர்ச்சி நிலையை விளங்கிக்கொள்வதற்கு சரிசெய்த வயதைப் பயன்படுத்தல் வேண்டும். உ.ம். :POA இன் 37 வாரங்களுக்கு முன் பிறந்த குழந்தையின் விடயத்தில் கலண்டரின்படி உண்மையான காலம் பிள்ளையின் சரிசெய்த வயதுக்கு பயன் படுத்தப்பட வேண்டும்.

ஊம். :POA இன் 32 வாரங்களில் பிறந்த குழந்தையின் விடயத்தில் (குழந்தை பிறப்பு எதிர்பார்க்கும் திகதியைவிட 8 வாரங்களுக்கு முன் பிறந்தது) அது 5 மாதங்களைக் கடந்த நிலையில் அதன் சரிசெய்யப்பட்ட வயதானது 3 மாதங்களாகும் (5 மாதங்கள- 8 வாரங்கள்) = 3 மாதங்கள்). ஆகவே இந்தக் குழந்தையின் வளர்ச்சி வரைபானது சாதாரணமான 3 மாதக் குழந்தையின் வளர்ச்சிக்கு ஒத்ததாகவே கொண்டு வளர்ச்சியை விளங்கிக்கொள்ள வேண்டும்

(பொதுச் சுற்று நிருப கடிதம் இல.02-18/2008- "சமூகத்திலுள்ள 5 வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் போஷாக்கு பிரச்சனை முகாமைத்துவத்திற்கான கைநூல்" என்பதைப் பார்க்க.)

இத்தகைய குழந்தையொன் 06 மாத வயதை அடையும் வரைக்கும் அல்லது ஒரு குழந்தை வைத்திய நிபுணர் தீர்மானிக்கும் வயது வரை சரிசெய்யப்பட்ட வயதே இவர்களது வளர்ச்சி மதிப்பீடுகளுக்கு பயன்படுத்தப்படவேண்டும்.

பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு 'B' பகுதியிலிருந்து முறையாக நிரப்பப்பட்ட வளர்ச்சிப் பதிவேடொன்று உதாரணத்திற்காக தரப்பட்டுள்ளது.

## பிள்ளையின் வளர்ச்சிப் பதிவேடு

பிறப்பு நிறை…...32…முப.

பிறப்பின்போது நீளம்….48.5

| திகதி | | | வளர்ச்சியின் நிலைமை | | | | | திரிபோஷா வழங்கப்பட்ட திகதி | | | மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் பற்றிய குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தி | மா | ஆ | நிறை | | | நீளம்/ உயரம் | | தி | மா | ஆ | |
| | | | கிகி | சாதாரண நிறை/ ‘அதிக நிறை” / மத்திய தரம் / நிறை குறைவு/ கடுமையான நிறைகுறைவு | வளர்ச்சி வீழ்ச்சி | செமீ. | நீளம்.·. உயரத்தின் நிலை | | | | |
| 10 | 10 | 09 | 3.8 | N | - | - | - | | | | |
| 12 | 11 | 09 | 4.7 | N | - | | | | | | |
| 14 | 12 | 09 | 5.5 | N | - | | | | | | |
| 12 | 01 | 10 | 6.2 | N | - | 62 | N | | | | |
| 15 | 02 | 10 | 6.8 | N | - | | | | | | |
| 10 | 03 | 10 | 7.5 | N | 0 | | | | | | சுரியான உணவு ஊட்டல் முறை பற்றி அறிவுறுத்தியது |
| 15 | 04 | 10 | 7.6 | N | 0 | | | 18 | 04 | 10 | |
| 12 | 06 | 10 | 7.6 | N | 0 | | | 20 | 06 | 10 | |
| 20 | 07 | 10 | 8.1 | N | 0 | 72.5 | N | | | | சி. நி. இற்கு அனுப்பியது |
| 10 | 10 | 10 | 7.5 | N | 0 | | | 15 | 10 | 10 | |
| 15 | 02 | 11 | 7.7 | X | 0 | | | 19 | 02 | 11 | |
| 15 | 04 | 11 | 8 | X | 0 | 82 | N | | | | சி. நி. போகவில்லை .திரும்பவும் அனுப்பியது |